பியூரிட்டன்களின் இளவரசன்

# ஜோன் ஓவன்

ஜெரமி வோக்கர்

REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**பியூரிட்டன்களின் இளவரசன் ஜோன் ஒவன்**

*ஜெரமி வோக்கர்*

*முதல் பதிப்பு 2014*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**

*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைப்பேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

*குறிப்பு: இப்புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் படங்களும் இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்டவை.*

# அறிமுகம்

*திருச்சபை வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாத கால திருச்சபை எழுப்புதலுக்குப் பிறகு பதினேழாம் நூற்றாண்டு பெற்றுத்தந்த பெருமகன்களே பியூரிட்டன் பிதாக்களாவர்* (Puritan Fathers). *இங்கிலாந்தில் அரச ஆதரவாளராக இருந்து செயல்பட்ட ஆங்கிலேயத் திருச்சபை* (Church of England) *வேதத்தின் அதிகாரத்தை மட்டும் மதித்து நடக்காமல் அதற்குப் புறம்பான போதனைகளைப் பின்பற்றும்படி வற்புறுத்தியதால் அதனை எதிர்த்து நின்று பெருந்துன்பங்களுக்கு முகம் கொடுத்தவர்களே பியூரிட்டன் பிதாக்கள். திருச்சபையைத் தூய்மையாக வேத அடிப்படையில் மட்டுமே நடத்தவேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தி வாழ்ந்துகாட்டிப் போதனை செய்ததால் பியூரிட்டன்கள் (தூய்மைவாதிகள்) என்ற பெயரில் மற்றவர்களால் அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயத் திருச்சபை ஒரு ஜெப நூலை வெளியிட்டு அதிலிருப்பவைகளை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதால் அதை எதிர்த்த பியூரிட்டன்களும் ஏனையோரும் ஒத்துழையாவாதிகள்* (Non-conformist) *என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர். ஜெபநூலைப் பின்பற்றி ஆங்கிலேயத் திருச்சபையின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுத்ததால் இவர்கள் மீது அரசினதும் ஆங்கிலேயத் திருச்சபையினதும் கொடுமைகள் அதிகரித்து 2000க்கும் அதிகமான போதகர்கள் ஆங்கிலேயத் திருச்சபையில் இருந்து நீக்கப்பட்டதுடன் அநேகமானோர் நாட்டிலிருந்தும் வெளியேற்றப் பட்டனர். இன்னும் அதிகமானவர்கள் உயிரிழக்கவும் நேரிட்டது. இதெல்லாம் வேதத்தை விசுவாசித்துப் பின்பற்றியதற்கு அவர்கள் கொடுத்த விலை.*

*இந்தப் பியூரிட்டன்களின் காலப்பகுதியில் வாழ்ந்து கர்த்தருக்குப் பணியாற்றி திருச்சபையை அலங்கரித்த பெருமகனே ஜோன் ஓவன்.*

அவர் மகா ஞானி. இறையியலறிஞர்களுக்கெல்லாம் மேலான அறிஞர். எழுத்தில் சிறந்தவர். தலைசிறந்த, எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக்கூடிய வேதப் பொக்கிஷங்களை எழுத்தில் நமக்குத் தந்தவர். அவையெல்லாம் ஆங்கிலத்தில் இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவர் கருணையும், ஆத்தும பாரமும் கொண்ட போதகர். அதையே அவர் தன் ஊழியத்திலெல்லாம் சிறந்ததாகக் கருதினார். பிரசங்கம் செய்வதில் அவருக்கு இணையில்லை. தனக்கென ஒரு தனி முறையைக் கைக்கொண்டு ஆவியில் நிறைந்து அவர் பிரசங்கித்தார். கிராமத்து சபைகளிலிருந்து நாட்டின் பாராளுமன்றம்வரை அவருடைய பிரசங்க சிறப்பின் மேன்மை பரவியிருந்தது. ஒலிவர் குரோம்வெல் அவரைத் தனக்கு சாப்ளினாக விவரமறியாமல் வற்புறுத்தி நியமிக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியில் ஓவன் மிகவும் தாழ்மையானவர். தன்னைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்ளாமல் தன் தலைவரான கிறிஸ்துவின் மகிமையை அனைத்திலும் நாடியவர்.

ஜோன் ஓவன் எத்தகைய மனிதர் என்பதையும், அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் சிறப்பையும், ஊழியத்தின் மேன்மையையும் ஆங்கிலத்தில் அவரைப் பற்றி வாசித்திராதவர்களுக்கு வசதியாக இந்த நூலில் விளக்கியிருக்கிறார் ஜெரமி வோக்கர். ஓவன் எழுதிய நூல்களின் தலைப்புகளை தமிழில் மாற்றாமல் அப்படியே ஆங்கிலத்தில் தந்திருக்கிறோம்.

முதலாவது ஆக்கத்தில் ஜோன் ஓவனுடைய வாழ்க்கையை விளக்கியது மட்டுமல்லாமல் அவரெழுதிய முக்கிய நூலான, ‘கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு’ (The Death of Death in the Death of Christ) என்ற நூலின் முக்கியத்துவத்தையும் அதன் பயன்பாடுகளையும் இன்னொரு ஆக்கத்தில் இந்நூலில் விளக்கியிருக்கிறார் ஜெரமி வோக்கர். அது பற்றிக் கொஞ்சம் நான் சொல்லத்தான் வேண்டும்.

சீர்திருத்தக் கிறிஸ்தவத்தையும், அதன் பெரும் பிரசங்கிகளையும், இலக்கியங்களையும் சமீபகாலமாகத்தான் தமிழினம் ஆர்வத்தோடு அறிந்து பயின்று வருகின்றது. 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் திருச்சபை வரலாற்றில் எழுந்த சீர்திருத்தத்திற்குப் பின்பு அதற்கு அடுத்த நூற்றாண்டில் திருச்சபை சீர்திருத்தத்திற்கான தூய்மைவாதிகளின் (பியூரிட்டன்) உழைப்பைப் பற்றி சபை வரலாற்றில் வாசிக்க முடிகிறது. 16ம் நூற்றாண்டில் மார்டின் லூத்தருக்கும், ஜோன் கல்வினுக்கும் பிறகு 17ம் நூற்றாண்டில்

ஜோன் பனியன், ஜோன் ஓவன் போன்றோர் தோன்றி திருச்சபை சீர்திருத்தம் தொடரும்படிப் பார்த்துக் கொண்டனர். சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் (பியூரிட்டன்) திருச்சபை வரலாற்றில் அழிவற்ற இடத்தைப் பிடித்திருக்கின்றார்கள். இன்று வேதம் நம் கரத்தில் இருப்பதற்கும், கர்த்தரின் திருச்சபை இந்த உலகில் தலைதூக்கி நிற்பதற்கும், வேதபூர்வமான கிருபையின் போதனைகளையும், சீர்திருத்தப் போதனைகளையும் உலகறிந்திருப்பதற்கும் இவர்கள் ஆற்றியுள்ள பணி மகத்தானது.

இவர்களின் பணிகளில் மேலானது, இரத்தினக் கற்களைப்போன்ற விலைமதிப்பில்லாத அநேக கிறிஸ்தவ இலக்கியங்களை எழுத்தில் வடித்து நமக்களித்துச் சென்றிருப்பதுதான். இவையனைத்தும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. சிறந்த கல்விமானான ஜோன் ஓவன் விலைமதிப்பற்ற பல முத்துக்களை நமக்களித்துச் சென்றிருக்கிறார். அவருடைய எழுத்துக்கள் அனைத்தும் பதினேழு வால்யூம்களாக இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவற்றில் ஒன்றுதான், அவர் எழுதிய “கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்” (The Death of Death in the Death of Christ) என்ற நூலாகும். இந்நூலுக்கு ஜிம் பெக்கர் (Jim Packer) என்ற தற்கால இறையியல் அறிஞர் ஆங்கிலத்தில் ஓர் அருமையான முன்னுரையை இருபத்தி ஐந்து பக்கங்களில் வழங்கியிருக்கிறார். ஆய்வு செய்து நீண்டதொரு முன்னுரை வழங்க வேண்டிய அளவுக்கு ஜோன் ஓவனின் வேத ஆய்வுத் திறமை இந்நூலில் அமைந்திருந்தது.

ஜோன் ஓவனின் இந்நூல் “கிறிஸ்து யாருக்காக மரித்தார்?” என்ற வினாவுக்கு பதிலளிக்கிறது. இந்நூலில், கிறிஸ்து உலகில் பிறந்த, பிறந்திருக்கும், பிறக்கப் போகும் அனைவருக்குமாகவும் சிலுவையில் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுக்கவில்லை என்பதை வேதவசனங்களின் அடிப்படையில் நிலைநாட்டி, கிறிஸ்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக மட்டுமே கல்வாரி சிலுவையில் மரித்தார் என்பதை வேதம் முழுவதிலும் இருந்து படிப்படியாக விளக்கி, சாட்சிகளுக்கு மேல் சாட்சியாக வேத வசனங்களை வாரி வழங்கி ஒரு மிகச்சிறந்த வக்கீலைப் போல வாதாடியிருக்கிறார் ஓவன். ஓவனின் வாதத்திறமையையும், வேத அறிவையும் நாம் இதில் கவனிக்க முடிகின்றது. அதையெல்லாம்விட உலக ஞானத்தின் அடிப்படையில் தனது போதனைகளுக்கு விளக்கந்தராமலும்,

தனது சொந்த எண்ணங்களுக்கு இடங்கொடுக்காமலும் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை வேதவசனங்களாக அள்ளி வழங்கி போதனைகளை விளக்கியிருப்பதே ஓவனின் நூலின் மதிப்பை உயர்த்துகின்றது.

“ஜோன் பனியனின் சரீரத்தில் ஊசியால் எங்கு குத்தினாலும் வேத இரத்தம் சிந்தும்” என்று ஸ்பர்ஜன் அவருடைய வேத ஞானத்தைக் குறித்து சொல்லியிருக்கிறார். பனியனின் காலத்தைச் சேர்ந்த ஜோன் ஓவன் பனியனுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவரல்ல என்பதை அவருடைய நூல் காட்டுகின்றது. வேத போதனைகளைத் தருகிறோம் என்ற பெயரில் வேதத்தில் இருந்து ஒன்றையும் நிலைநாட்டக்கூடிய அறிவோ, திறமையோ இல்லாது எதையெதையோ பேசிக்கொண்டிருக்கும் தமிழின சபைப் போதகர்கள் பெருகி மலிந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் வேத போதனைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக அமைந்திருக்கிறது ஜோன் ஓவனின் நூல். ஓவனைப் போலவே சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன்களும் இறை போதனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு சத்தியத்தையும் நிலைநிறுத்த அளவற்ற வேத வசனங்களை அள்ளி வழங்கி, ஒவ்வொன்றையும் வேதத்தில் அவை அமைந்திருக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப விளக்கி ஆணித்தரமான வாதங்களை நம்முன் வைத்திருக்கின்றனர்.


கிறிஸ்து சகல மனிதர்களையும் இரட்சிப்பதற்காக மரித்தார் என்று சொல்லும் உலகளாவிய பரிகாரப்பலிக் கோட்பாட்டையும் (Universal Atonement), கிறிஸ்துவின் மரணபலியின் பலன்கள் கிறிஸ்துவுக்காகத் ‘தீர்மானம்’ எடுப்பவர்களுக்கு மட்டுமே பலனளிக்கும் என்ற ஆர்மீனியனிசப் போதனையையும் தோலுரித்துக்காட்டி, வேதபோதனைகளின் அடிப்படையில் அவற்றை நிராகரிப்பதோடு, கிறிஸ்து தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்காக மட்டுமே மரித்தார் என்ற போதனையை ஆணித்தரமாகத் தன் நூலில் விளக்கியிருக்கிறார் ஓவன். போதகர் ஜெரமி வோக்கர் ஆங்கிலத்திலிருக்கும் இந்நூலின் விசேட அம்சங்களை விளக்கி ஓவனின் போதனைகளின் சுருக்கத்தையும் நமக்களித்திருக்கிறார். அவற்றை இந்நூலில் நான் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறேன். கிறிஸ்துவின் சிலுவைத் தியாகத்தின் பலன்களைப் பற்றிய மேலான வேத அறிவைப் பெற்றுக்கொள்ள இவ்வாக்கம் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன். மேலெழுந்த வாரியாக வாசிக்காமல் இந்த ஆக்கத்தை

*நீங்கள் ஒரு தடவைக்கு மேலாக சிந்தித்து வாசித்தீர்களானால் ஜோன் ஓவனின் போதனைகளைப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும். கர்த்தரை விசுவாசிப்பதற்கான வல்லமை ஆத்துமாக்களின் கரத்திலேயே இருக்கிறது என்ற தவறான எண்ணத்தின் அடிப்படையில் நடந்துவரும் தமிழினத்தின் பெரும்பாலான சுவிசேஷ ஊழியங்கள் எந்தளவுக்கு வேதத்திற்கு புறம்பானது என்பதை ஜோன் ஓவன் சந்தேகத்திற்கிடமில்லாமல் தன் நூலில் விளக்கியிருக்கிறார்.*

*இந்நூல், ஓவனின் சிறப்பை நீங்கள் அறிந்துகொண்டு அவருக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லவும், தொடர்ந்து அவர் எழுதியவற்றை வாசிக்கவும் உங்களைத் தூண்டுமானால் அதுவே இதற்குக் கிடைத்த சிறப்பாக இருக்கும். அதையும்விட ஓவன் விசுவாசித்த தேவனை நீங்கள் விசுவாசித்து, அவர் ஆத்மார்த்தமாகப் பின்பற்றிய சத்தியங்களுக்காக வாழவும், துன்பங்களைத் தாங்கவும், உழைக்கவும், ஏன் உயிரையும்கூடக் கொடுக்க உங்களைத் தூண்டுமானால் அதைவிடப் பெரிதாக எதையும் இந்த நூலின் மூலம் நாம் எதிர்பார்க்க முடியாது.*

*இந்நூலில் வந்திருக்கும் ஆக்கங்கள் ஏற்கனவே திருமறைத் தீபத்தில் வெளிவந்தவை. இவற்றை நூல்வடிவில் சீர்திருத்த வெளியீடுகள் முதல் தடவையாக தமிழகத்தில் வெளியிட்டிருக்கிறது. அவர்களுக்கு என் நன்றிகள்.*

**ஆர். பாலா**
**ஆக்லாந்து, நியூசிலாந்து**



ஜோன் ஓவன் (கி.பி. 1616 - 1683)

# ஜோன் ஓவன்
# (John Owen)

ஒரு கிறிஸ்தவன் எப்படி வாழ வேண்டும் என்று தன்னுடைய வாழ்க்கையின் மூலம் உதாரணமாக விளங்கிய ஜோன் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவர். அநேக விதங்களில் அவர் தான் வாழ்ந்த காலத்துக்கு மிகவும் தேவையான மனிதராக இருந்தாலும் வேறு சில விதங்களில் தன் காலத்தையும் மிஞ்சிய மனிதராக இருந்தார். இருந்தபோதும் கிருபையின் கனிகளாக அவர் கொண்டிருந்த அநேக குணாதிசயங்களும், வாழ்க்கையில் பயன்படுத்திய விதிமுறைகளும் எக்காலத்துக்கும் உரியவை. நேர்மையானவராகவும், உழைப்பாளியாகவும், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய சிறந்த கிறிஸ்தவ மனிதர் என்ற முறையில் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவராகிறார்.

ஒரு சிறந்த இறையியல் அறிஞர் என்ற முறையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். விண்மண்டலத்தில் பளீரெனக் கண்சிமிட்டிக் காட்சியளிக்கும் அநேக நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றாக ஜோன் ஓவன் விளங்குகிறார். ஒரு சில விஷயங்களில் சம காலத்து அறிஞர்கள் அவரைவிட சிறப்பானவர்களாக இருந்திருந்தாலும், கர்த்தரின் வேதத்தில் அவர் கொண்டிருந்த ஆழமான அறிவு, இணக்கமான ஈடுபாடு என்பவற்றைப் பொறுத்த வரையில் அவர் காலத்தில் அவருக்கு இணையானவர்கள் இருக்கவில்லை.

அழிவில்லாத படைப்புகளைத் தந்த படைப்பாளி என்ற அடிப்படையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். ஆங்கிலம் பேசப்படும் தேசங்களில் அநேக சீர்திருத்த கிறிஸ்தவர்கள் ஓவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

*பெரும்பாலானவர்கள் அவருடைய நூல்களில் ஒன்றையாவது வைத்திருப்பார்கள். ஆனால், அவருடைய நூல்கள் பல இடங்களில் வாசிக்கப்படாது தூசி படர்ந்து காணப்படுகின்றன. சம காலத்து மக்களுக்கு அக்கறையெடுத்து பெரிய நூல்களை வாசிக்கப் பொறுமையில்லை; கவனத்தோடு ஆராய்ந்து படிப்பதில் அக்கறையில்லை; விடாமுயற்சியோடு பல பக்கங்களை வாசிக்கவும் அவர்களுக்கு மனதில்லை. ஓவனின் எழுத்துக்களும், நூல்களும் ஒரு பெரும் சிக்கலான பழத்தோட்டத்தைப் போன்றவை. அவற்றில் பழ அறுவடை செய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஒவ்வொரு மரத்திலும் தொகையான பழங்கள் இருக்கின்றன. ஓவனின் நூல்களில் பல ஆங்கிலத்தில் பல்வேறு பதிப்புகளில் வாசகர்களின் வாசிப்புத் திறனுக்கும், தேவைக்கும் ஏற்ற முறையில் இலகுவான ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன. ஓவனின் எழுத்துக்களைப் படிக்க ஆரம்பித்திருப்பவர்கள் மேலும் மேலும் அவருடைய எழுத்துக்களோடு பரிச்சயப்பட்டு அவரை அறிந்துகொள்ளும்படி அவை வசதியளிக்கின்றன. இருந்தபோதும் ஓவனின் எழுத்துக்களில் ஆர்வமும், அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளும் திறனும் உள்ளவர்கள் அவருடைய ஆக்கங்களை மூலத்தில் வாசிப்பது நன்மை பயக்கும். விஷயமேயில்லாத இக்காலத்தவர்களின் எழுத்துக்களோடு ஒப்பிடும்போது ஓவன் ஆங்காங்கு தந்திருக்கும் சாதாரண குறிப்புக்கள்கூட மிகவும் ஆழமானவையாகவும், சத்தானவையாகவும் இருக்கின்றன.*

*ஓவனுடைய ஆற்றலையும், பெருமையையும் படம்பிடித்துக் காட்ட முயலும் நான் ஓவனின் எழுத்துக்களில் பாண்டித்தியம் பெற்றவனல்ல. ஓவனுடைய வாழ்க்கையைப் பற்றிய இந்த ஆக்கத்தில் ஓவனைப் பற்றிய புதிய ஆராய்ச்சிகளின் பலன்கள் எதையும் நான் வெளியிடவில்லை; அத்தோடு அவருடைய எழுத்துக்களின் சிறப்பை அறிவிப்பதில் தேர்ந்தவனாகவும் என்னைக் காட்டிக்கொள்ளவில்லை. ஓவனுடைய எழுத்துக்கள் என்னைத் தாழ்மைப்படுத்தி என்னுடைய ஞானக்குறைவையே வெளிப்படுத்து கின்றன. இந்த ஆக்கத்தை எழுதுகிறபோது ஓவனிடமிருந்து கற்றுக்கொள்ளுகிற எண்ணத்தோடேயே அதை ஆரம்பிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த ஆக்கம் நீண்டுவிடக்கூடாதென்பதற்காக ஓவனுடைய ஆக்கங்களில் இருந்து ஒரு சில நேரடிக் குறிப்புகளை மட்டுமே இதில் தந்திருக்கிறேன். இந்த ஆக்கம் ஓவனுடைய எழுத்துக்களை நீங்களே நேரடியாக வாங்கி வாசித்து அவை தரும் பெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள உதவட்டும்.*